Registered as a Newspaper in Srilanka
விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 02 வெள்ளிக்கிழமை (16.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 87

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


# தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபின் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முடியும்

## அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டில் சமாதான முயற்சிகள் சீர்குலைந்தமைக்கு விடுதலைப்புலிகளே பொறுப்பேற்கவேண்டும். இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகவில்லை.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட்ட பின்னர் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு உள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரி வித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)



விலைவாசி உயர்வைக் கண்டித்து ஐக்கிய தேசியக்கட்சி நேற்று வத்தளை நகரசபைக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தையடுத்து, வீதியின் நடுவே கொடும்பாவியையும் சவப்பெட்டியையும் எரித்த காட்சியை படத்தில்காணலாம்.

## தஞ்சம் கோரிய 16 பேர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த 16 பேர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவ் வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு அவர்கள் அனைவரையும் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாகத் தெரிவித்து பொலிஸில் சரணடைந்து விசாரணைகளின் பின் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலருக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந் நோய் ஏனையவர்களுக்கும் பரவலாம் என்ற அச்சம் நிலவுவதாகவும் கூறப்பட்டது. (ச-3,5)

## இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அரசியலமைப்பு சட்டத்தில் மாற்றம்

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் தகுந்த மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிஸா றைஸை சந்தித்துப் பேசுவதற்காக வாஷிங்டன் சென்றுள்ள அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசு ஆர்வம் கொண்டுள் ளது. அதிகாரத்தை எல்லோ ருக்கும் பகிர்ந்து அளிக்கும் வகையில் அரசி யலமைப்புச் சட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

இது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் சில யோசனைகளைத் தெரிவித்துள்ளனர். அவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் அரசியல் சட்டத்தில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும். அநேகமாக அடுத்த மாதம் இது அறிவிக்கப்படலாம் என்றார் ரோகித போகொல்லாகம.

தமிழ்ச் சிறுபான்மையினருடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் திட்டம் குறித்து அனைத்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-ஜேர்மன் தூதுவர்களை தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான தூதுவரையும் இந்திய தூதுவரையும் சந்தித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற் பட்டுள்ள இடப்பெயர்வு, அதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்கள் குடியி ருப்பை நோக்கி படையினர் மேற்கொள்வதாக கூறப்படும் எறிகணைவீச்சுக்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள், மக்களுக்கு உடனடியாக தேவையான மனிதாபிமான உதவிகள் என்பன (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான உதவிப் பரிமாற்றத்துக்கே அமெரிக்காவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

### அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா விளக்கம்

(கொழும்பு)

மனிதாபிமான உதவிகள் பரிமாற்றம், சமாதான முன்னெடுப்புச் செயற்பாடுகள், படைகளுக்கிடையிலான கூட்டுப்பயிற்சி ஆகிய மூன்று அம்சங்களின் அடிப்படையிலேயே இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிபுகளை அறிவிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று காலை அரசாங்க (04 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலானையில் கைக்குண்டு வீச்சு

இரத்மலானையில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்வதாககல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் விலி அபேய நாயக்க தெரிவித்தார். (ச)

## மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பின்பே தேர்தல் முறை மறுசீரமைப்பு செய்யவேண்டும்

### ஐக்கியதேசியக்கட்சி யோசனை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாடுபூராகவும் மக்கள் தொகை கணக்கெடுப்பொன்றை மேற்கொண்ட பின்னரே தேர்தல் முறை மறு சீரமைப்பு மேற்கொள் ளப்பட வேண்டும். தேர்தல் முறை மறுசீரமைப்புத் தொடர்பான சட்ட மூலங்கள் பாராளுமன்றத் தேர்தல் உட்பட சகல தேர்தல் களையும் கருத்தில்கொள்வதாக அமையவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி, தேர்தல் முறை மறுசீரமைப்புத் தொடர்பான தெரிவுக்குழு விடம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் முறை மறுசீரமைப்புத் தொடர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவு., மன்னார் எல்லைப் பகுதி நோக்கி ஷெல் தாக்குதல்

(கிளிநொச்சி)

மன்னார் வவுனியா எல்லைக்கிராமங்களான முள்ளிக்குளம், கீரிசுட்டான் மற்றும் பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை கடும் ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆட்லறி (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழிற்கு பத்திரிகைத்தாளை எடுத்துச்செல்ல அரசு உடனடியாக அனுமதி அளிக்கவேண்டும்

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகை நிறுவனங்களுக்குத் தேவையான பத்திரிகைத் தாளை எடுத்துச் செல்வதற்கான தடை நீக்கப்பட்டு அவற்றை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வெளியிட்ட அறிக்கை வருமாறு, யாழ்.குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை மூடப்பட்டு ஏழு மாதங்கள் நிறைவடைந்துள்ளது. குடாநாட்டிற்கும் ஏனைய மாவட்டங்களுக்குமிடையிலான மக்கள் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதோடு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் விவசாயம், வர்த்தகம், கடற்தொழில், கைத்தொழில், (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# ஸ்கொட்லாந்து அணியை வென்றது அவுஸ்திரேலியா

உலகக் கிண்ணத் தொடரை நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா சிறப்பாக ஆரம்பித்துள்ளது. பொன்டிங் சாதனை சதம் கைகொடுக்க கத்துக்குட்டி ஸ்கொட்லாந்தை 203 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

மேற்கிந்தியத் தீவுகளில் 9-வது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடக்கின்றது. இதில் நேற்று முன்தினம் செயின்ட்கிட்ஸில் நடந்த ஏ பிரிவு லீக் போட்டியில் உலக சம்பியன் அவுஸ்திரேலியா, கத்துக்குட்டி ஸ்கொட்லாந்தை சந்தித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணித் தலைவர் கிரேக் விஷாட் களத் தடுப்பைத் தெரிவு செய்தார். இதனடிப்படையில் அவுஸ்திரேலியாவின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய கில்கிறிஸ்ட், ஹைடன் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பிக்க ஸ்கொட்லாந்து பந்து வீச்சாளர்கள் சோர்வடைந்தனர்.

46 ஓட்டங்கள் எடுத்திருந்த கில்கிறிஸ்ட் ஆட்டம் இழந்தார். மறுமுனையில் கலக்கலாக ஆடிய ஹைடன் 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இளம் மைக்கல் கிளாக் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

இதற்குப் பின்னர் அணித் தலைவர் பொன்டிங் 6 ஓட்டங்களாக அடித்து ரசிகர்களுக்கு வான வேடிக்கை காட்டினார். ஒருநாள் போட்டிகளில் தனது 23-வது சத மடித்த பொன்டிங் 117 ஓட்டங்கள் (9 நான்கு, 5 ஆறு ) விளாசினார். இறுதியில் கொக் 40 ஓட்டங்களையும் வொட்ஷன் 18 ஓட்டங்களையும் அதிரடியாக சேர்க்க அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 334 ஓட்டங்களைக் குவித்தது.

எட்ட முடியாத இலக்கை விரட்டிய ஸ்கொட்லாந்து அணி அவுஸ்திரேலியாவின் அனுபவப் பந்து வீச்சாளர் மெக்ராத்தின் பந்தில் விக்கெட்டுக்களை இழந்தது. சிமித் மட்டும் அரைச் சதம் கடந்து ஸ்கொட்லாந்து அணிக்கு ஆறுதல் கொடுத்தார்.

40.1 ஓவரில் 131 ஓட்டங்களை மட்டும் பெற்று ஸ்கொட்லாந்து தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலியா சார்பில் கலக்கலாகப் பந்து வீசிய மைக்ராத் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். துடுப்பாட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக சிமித் 51 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்ட நாயகனாக அணித் தலைவர் றிக்கிப் பொன்டிங் தெரிவானார். (ச-5)

# கனடாவை வீழ்த்தியது கென்யா

உலக கிண்ணத் தொடரை கென்யா அணி வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது. கனடாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. உலகக் கிண்ணத் தொடரின் சி பிரிவு லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் கென்யா – கனடா அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா அணி 50 ஓவர்களில் 199 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக பில்கிளிப் 34 ஓட்டங்களைப் பெற்றார். கென்யா சார்பில் கமான்டே, டிக்காலோ ஆகியோர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கென்யா அணி ஆரம்பத்தில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைச் சேர்த்தது. அமுனா 58-வது அரைச் சதத்தை நிறைவு செய்தார். இவருக்கு ஒத்துழைப்புத் தந்த அணித் தலைவர் டிக்காலோ ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் கென்யா 43.2 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. (ச-5)




# முக்கிய அறிவித்தல்

சி.கமலாதேவி
No.262, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, இலக்கம் 262இல் வதியும் சின்னையா மகள் கமலாதேவி ஆகிய எனக்கும் எனது சகோதரான சின்னையா துரைரட்ணம் என்பவருக்கும் நிலப்பரப்பு 6 உம் குழி 4.35 பெரும்பான்மை பங்குடைய ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள 'வளந்தில் அல்லது கட்டைப்பாளியும்' ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள 'நளவன்காட்டி அல்லது பனைவடலி' என்ற துரைரட்ணத்தின் ஆதனமும் உள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பாக தனக்குக் குறித்த சின்னையா துரைரட்ணம் 12.03.1982 திகதியிடப்பட்ட, பிரசித்த நொத்தாரிஸ் முத்துக்குமாரு சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் என்பவரால் 9469 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோனித் தத்துவத்தை தந்துள்ளார் என துரைரட்ணத்தின் சகோதரி சின்னையா மகள் புஸ்பலீலா என்பவரும் செல்லையா கனகரட்ணம் என்ற ஒருவரும் கூறிக் கொண்டு குறித்த ஆதனத்தை விற்பதற்கு முயற்சிகள் செய்வதாக அறியப்படுகின்றது.

குறித்த நியமனம் இலங்கையில் தன்னால் எழுதிக் கொடுக்கப்பட்ட தெனக் கூறுவது, தான் மலேசியாவில் வசிப்பதாகவும் குறித்த அற்றோனித் தத்துவத்தில் காட்டப்பட்டுள்ளதும் உண்மைக்குப் புறம்பானது எனவும், தான் சிங்கப்பூரில் வசிப்பதாகவும் இலங்கைக்கு அந்நேரம் தான் வரவில்லை என்றும் குறித்த துரைரட்ணம் பதிவாளர் நாயகத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு தனது ஆட்சேபனையை தெரியப்படுத்தி உள்ளதாகவும், எனக்கு அறிவித்துள்ளார்.

அத்தோடு 17.04.2006 இல் சிங்கப்பூர் பிரசித்த நொத்தாரிஸ் Tan Chye Kwee என்பவரால் என்னை தனது தத்துவகாரராக நியமித்துள்ளார். எனவே குறித்த ஆதனத்தை முழுமையாக விற்பதற்கு புஸ்பலீலாவுக்கு எவ்வித உரித்தும் இல்லை என்றும் அவர்வசம் உள்ள 9469 ஆம் இலக்க அற்றோனித் தத்துவம் குறித்த துரைரட்ணத்தின் செயல் அல்ல என்றும், இந்தக் காணிக்கு வேறு யாரும் உரிமை கோரவோ விற்கவோ முடியாதென்பதையும் இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றேன்.

சி.கமலாதேவி

(822)

# வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு விரைவில் தற்காலிக நியமனம்

(திருகோணமலை)

யாழ்.குடாநாட்டில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இம் மாத இறுதிக்குள் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு தற்காலிகமாக நியமிக்கப்படவுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இவர்களுக்கு வெற்றிடங்களிலுள்ள பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து மேலதிக கல்விப் பணிப்பாளரே தற்காலிக நியமனங்களை வழங்குவார் என அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாகக் கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளுடைய தாய்மார்கள் மற்றும் இருதய நோயாளர்களுக்கு அவர்களின் வதிவிடத்திற்கு அண்மையாகவுள்ள பாடசாலையிலும் ஏனைவர்களுக்கு வெளியிடங்களிலும் நியமனம் வழங்கப்படுமெனவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ச-5)

# யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 906 மாணவர்கள் தெரிவு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 2006/2007ஆம் கல்வி ஆண்டுக்கு 906 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் தெரிவித்துள்ளார்.

மருத்துவத்திற்கு 69 மாணவர்களும் சுகாதாரமும் விஞ்ஞானத்திற்கு 19 மாணவர்களும் சித்தமருத்துவத்திற்கு 53 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விவசாயத்திற்கு 62, முகாமைத்துவம் 101, வர்த்தகம் 25, கலை 296, சட்டம் 17, இசை 48, நடனம் 38, சித்திரமும் வடிமைப்பும் 29, கணித விஞ்ஞானம் 12, பௌதிக விஞ்ஞானம் 89, உயிரியல் விஞ்ஞானம் 48 பேர் என்ற அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட் 906 மாணவர்களினதும் பெயர்விபரங்களை பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும் என பதில் துணைவேந்தர் மேலும் கூறினார். (ச-3)

# கஹதுடுவையில் 13 பேர் கைது

கஹதுடுவப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது 13 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு முதல் நேற்று அதிகாலைவரை பொலிஸார் இத் தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 13 பேரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்வதாக கல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விலி அபயநாயக்க தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டோர் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்களென்றும் கஹடுவப் பிரதேசத்தை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவர்கள் என்றும் இவர்கள் தமது அடையாளங்களை உரிய முறையில் அடையாளப்படுத்தாமையினாலேயே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதி வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-3)

# சமய பாட மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சென்ற ஆண்டுக்கான மாகாண மட்ட சமய பாட மீள் பரீட்சை இன்று நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இப் பரீட்சைக்குரிய வினாத்தாள் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் வெளியானமையினால் பரீட்சை நடைபெறவில்லை.

தற்போது தரம் பத்தில் கல்வி கற்கும் மாணவர்களை இப் பரீட்சைக்குத் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச-3)

# கடத்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்

(வவுனியா)

வவுனியாவில் கடத்தப்பட்ட இருவரில் ஒருவர் வீதி ஒன்றில் விடப்பட்ட நிலையில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் வந்த குழுவினராலேயே இவ்விருவரும் நேற்று முன்தினம் பிற்பகல் பம்பமடுவில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர்.

தற்போது காணாமல் போனவர் சாரதி என அறியவருவதுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். இவர்கள் எதற்காகக் கடத்தப்பட்டனர் என்பது குறித்து வவுனியாப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ச-3)

# விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சைக்குரிய விண்ணப்ப இறுதி நாள் இம் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை வைகாசி மாதம் இறுதி வாரத்தில் நடைபெறும் என யாழ். சைவ பரிபாலனசபையின் கௌரவ தபில் தேர்வுச் செயலாளர் திரு. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ச)

# நிதியுதவி

இந்து கலாசார திணைக்களத்தினால் சிறப்பான முறையில் இயங்கி வரும் வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலைக்கு 30 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக இந்து கலாசார திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-3)

## ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி

உலக இரட்சகரான இயேசுவே நீசப்பாவிகளின் மேல் அளவில்லா இரக்கம் உள்ளவரே முடியாத காரியங்களை கை கூடப் பண்ணியவரே எங்கள் இயேசுவே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

(மூன்று முறை சொல்லவும்)

(ச-649)

# விற்பனைக்கு

புத்தம் புதிய போட்டோ கொப்பி மெசின் (ஸ்கானர், பிறின்ரர், பக்ஸ் இணைந்தது) எக்ஸ்ரா இரண்டு ரோனர்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- ஐங்கரன் ஸ்ரோர்ஸ் (பொருளியற் கல்லூரி முன்பாக), 194, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 222 8368.

(820)

ஒரு விஷயம் பற்றி அனுதாபமிருந்தால்தான் அதை புரிந்து கொள்ள முடியும்.

—ராஜாஜி

வலம்புரி

## இனவிவகாரத்தில் பிரித்தானியாவுக்கு தார்மீகப் பொறுப்பு உண்டு

இலங்கையில் சமாதானம் ஏற்பட பிரித்தானிய அரசாங்கம் உதவுமென அந்நாட்டுப் பிரதமர் ரொனி பிளேயர் கூறியுள்ளார்.

இலங்கையின் சமகால சூழ்நிலையை தான் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளதாகக் கூறும் பிரதமர் ரொனி பிளேயர், 2002 ஆம் ஆண்டு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு பிரித்தானிய அரசு உதவுமெனக் கூறும் பிரதமர் ரொனி பிளேயர், அந்த உதவி எவ்வாறு அமையுமெனக் கூறவில்லை.

இலங்கை அரசு சமாதானத்தை ஏற்படுத்துமாறு உலக நாடுகள் கூறுவதும், அவற்றின் கோரிக்கைகளை இலங்கை அரசு ஏற்று செயற்படுமென்ற நம்பிக்கைகளும் ஈழத் தமிழர்களிடம் இருந்து நீங்கி வருடக் கணக்கைக் கடந்து விட்டது.

வெளிநாடுகளின் கோரிக்கை எதனையும் இலங்கை அரசு செவிசாய்ப்பதாகவில்லை. இந் நிலையில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் பிரித்தானிய அரசு உதவும் என அந் நாட்டின் பிரதமர் ரொனி பிளேயர் கூறியது சம்பிரதாயமான 'மொழிச் சடங்கா' அல்லது இதய பூர்வமான அறிவிப்பா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இலங்கை அரசுக்கு ஆயுத உதவி மற்றும் இராணுவப் பயிற்சி என்பவற்றை அவ்வப்போது வழங்கி வரும் பிரித்தானியா பற்றி ஈழத் தமிழர்களுக்கு நல்ல நினைப்புக் கிடையாது.

அதிலும் இலங்கையைக் குடியேற்ற நாடாக வைத்திருந்த பிரித்தானியா, இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும்போது பெரும்பான்மை இனமான சிங்கள மக்களிடம் நாட்டை ஒப்படைத்து விட்டுப் போனதும், தமிழினம் பற்றி இம்மியும் சிந்திக்காததுமே தாம் படும் நீங்காத் துன்பத்துக்குக் காரணம் என ஈழத் தமிழர்கள் கருதுகின்றனர்.

பிரித்தானிய குடியேற்ற வாதம் இனங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகளை சமரசப்படுத்தியிருந்தாலும் தமது கட்டுப்பாட்டுக்குள் இருந்த நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கும் போது ஏற்கனவேயிருந்த அரசியல் முறைமை, ஆட்சி முறைமை, இனத்துவ இறையாண்மை என்பவற்றைக் கவனிக்காது ஒரு பகுதியினரிடம் நாட்டை ஒப்படைத்து விட்டுப் போனமையால் ஒரு நாட்டின் உறவுகள் தமக்குள் சண்டையிட்டு, பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முடியாமல் தத்தளிக்கின்றன.

இந்தப் பரிதாபத்தின் நூறு வீத அனுபவிப்பும் இலங்கைக்கு பொருத்துடையதாகும். எனவே இனத்துவ முரண்பாடுகளால் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து யுத்தத்தையும், இன அழிப்புகளையும் சந்தித்து வரும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் தார்மீகப் பொறுப்பு பிரித்தானியாவுக்கு உண்டு. அவ்வகையில் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் கூறியதை வரவேற்கலாம்.

ஆனால் அமெரிக்காவின் பாதையில்-கொள்கையில் பயணிக்கும் பிரித்தானியா, இலங்கை விடயத்தில் ஓர் சமத்துவமான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அதாவது இலங்கையின் இன விவகாரம் சமாதான முறையில் தீர்க்கப்பட வேண்டுமாயின் முதலில் இராணுவத்திற்கான ஆயுத உதவி, இராணுவப் பயிற்சி போன்றவற்றை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன் ஈழத் தமிழர்களின் வரவேற்பும் அங்கீகாரமும் தனக்குக் கிடைக்கக் கூடியவாறு தனது செயற்பாட்டையும் மாற்றியமைப்பது பிரித்தானியாவின் முதற்பணியாகவிருக்கும்.

# இலங்கைக் குற்றப்புலனாய்வுத்துறை மீது அக்ஷன் பாம் நிறுவனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த வருடம் பிரான்ஸ் நாட்டின் தொண்டர் நிறுவனமான அக்ஷன் எகென்ஸ் ஹங்கர் நிறுவனத்தின் பணியாளர்களின் படுகொலை தொடர்பாக நடைபெற்று வரும் வழக்கில் நீதிபதியின் உத்தரவுகளைக் குற்றப்புலனாய்வுத்துறை உதாசீனம் செய்து வருவதாக அந்த நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

அந்த நிறுவனம் விடுத்துள்ள தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

எல்லா சாட்சியங்களும் விசாரிக்கப்பட வேண்டும். சட்டபூர்வமாகவும் பாதுகாப்பாகவும் அவைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும். நாம் இலங்கைச் சட்டங்களுடன் ஒத்துப் போகிறோம். குற்றப் புலனாய்வுத்துறையினர் நீதிமன்றத்தின் உத்தரவுகளை நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றோம்.

இந்தப் படுகொலை இடம்பெற்று 7 மாதங்கள் கடந்த நிலையில் உண்மையைக் கண்டறிவதற்கு நாம் ஆவலாக உள்ளோம். கடந்த வருடம் டிசம்பர் மாதம் குற்றப் புலனாய்வுத் துறையினரும் அவுஸ்திரேலியாவின் நிபுணர்களும் தடவியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

கொலையாளிகளைக் கண்டறிவதற்கு இது முக்கியமானது. ஆனால் அந்த வேலைகள் தொடர்பாக நீதிமன்றத்தினால்தான் மேற்கொள்ளப்பட்டன. குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணைகளின் அடிப்படையில் வழக்கைத் தொடர கடந்த மாதங்களில் நீதிபதி முன்வந்துள்ளார்.

இலங்கையில் சாட்சிகளுக்கான பாதுகாப்புச் சட்டம் இல்லாததால் இந்த படுகொலைகள் தொடர்பாக நீதிமன்றம் நேரடியான சாட்சியங்களை இதுவரை பெறவில்லை. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மீள் குடியேற்ற அமைச்சர் தலைமையில் அமைச்சர்கள் குழு மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு எதுவுமில்லை என மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இடைத்தங்கல் முகாமுக்கு விஜயம் செய்த அவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்புப் பிரதேசத்திலேயே நடந்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை பார்வையிடுவதற்காக அமைச்சர்களான அமீர் அலி, அமைச்சர் பசில் சேவுதாவுத் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அருமைநாயகம் ஆகியோர் விஜயம் செய்தனர்.

முகாம்களில் இருக்கின்ற மக்களுக்கு எந்தவித உணவுத் தட்டுப்பாடும் இல்லை. அவ்வாறான நிலை எந்த முகாம்களிலுமில்லை என அரசாங்க அதிபர் கூறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தாங்கள் சென்ற முகாம்களிலும் இந் நிலையினைப் பார்வையிட்டதாகவும் தான் இரண்டு நாள்களுக்கு முன் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த போது 200 மெற்றிக்தொன் அரிசி தேவை என கூறியிருந்ததுடன் ஏனைய பொருள்களும் தேவை எனக் கூறிய போது அவற்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஒரு வார காலத்துக்குரிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். (ச-3)

# அக்கரைப்பற்றில் சூட்டுக் கொலை

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முகமட் தெரிவித்துள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 28 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்ததாகவும் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-3)

# விடுமுறை தினங்களில் கருத்தரங்கு ஆசிரியர்கள் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள், சேவைக் காலக் கருத்தரங்குகள் சனி, ஞாயிறு, போயா விடுமுறை தினங்களில் நடத்தப்படுவது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மௌனம் சாதிப்பதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போயா விடுமுறை, ஞாயிற்றுக்கிழமை , சனிக்கிழமை விடுமுறை நாள்கள் உட்பட சகல விடுமுறை நாள்களிலும் போட்டி போட்டு நடத்தப்படுகின்றன.

இந்த விடயத்தில் ஆசிரியர் பெரும் வேலைப்பளு, ஓய்வு, ஆசிரியர்களின் குடும்பத்தேவை என்பன முற்றாகப் புறக்கணிக்கப்படுவதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகள் தமது விருப்பத்திற்கேற்ப ஆசிரியர்களின் நலன்களை முற்றாகப் புறக்கணித்து நடப்பது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மௌனம் சாதிப்பதோடு ஆசிரியர் தொழிற்சங்கப் பிரமுகர்களே பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகவிருந்து அதிகாரிகளுக்கு உறுதுணையாகவிருந்து ஒத்துழைப்பு வழங்குவதோடு விடுமுறை காலங்களில் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகளை நடத்தி வருவதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ச-5)

## வெள்ளி நற்சிந்தனை 09

# நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

மனிதனுடைய மகிழ்ச்சிக்குத் துணையாக இருப்பவற்றுக்குள் செல்வம் முதன்மை பெற்றதாகக் கருதப்படுகின்றது. அதைத் தேடுவதிலேயே வாழ்க்கையின் பெரும் பகுதியும் செலவழிகின்றது. பொருள் தேட்டம் மனித வாழ்க்கையில் இன்றியமையாததே.

ஆனால் செல்வம் எம்மோடு என்றும் நிலைத்து நிற்காது. தன்முயற்சியினால் தேடும் செல்வம் அறவழியில் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லறம் செய்வதற்கு இன்றியமையாதது செல்வம்.

தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் பேணும் இல்வாழ்வான் செல்வம் பற்றி நன்குணரவேண்டும். முன்னோர்கள் தமது வாழ்வியல் பட்டறிவு மூலம் அதை உணர்த்திச் சென்றுள்ளனர்.இன்று அது எம்மையும் சிந்திக்க வைக்கும்.

செல்வத்தைத் தேடும் முயற்சிகளில் உழுதுண்டு வாழ்வதே வாழ்க்கையென வள்ளுவர் சிறப்பித்துச் சொன்னார். 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்ற முதுமொழியும் வழக்கிலிருந்தது.

தொழில்களில் மிக உயர்ந்த தொழிலாகக் கருதப்பட்ட நிலவேளாண்மை இயற்கையோடு ஒட்டி பருவங்களின் மாற்றத்தோடு இயைபுபட்டிருந்தது. கீழைத்தேய பண்பாட்டின் அடித்தளமாக அமைந்து 'அரிசிப் பண்பாடு' என மேலை நாட்டவரால் ஆய்வுக்குட்பட்டுள்ளது.

பயிர்த்தொழில் செய்து தேடும் செல்வம் பலருக்கு வாழ்வு தரும். பலரோடு இணைந்து செய்யும் இத்தொழில் சில விலங்குகளையும் பறவைகளையும் மனிதன் தன்னோடு சேர்த்துக் கொள்ள வாய்ப்பளித்தது.

ஆதனால் அத்தொழில் மூலம் பெறும் செல்வம் பலரோடு கூடி உண்ணும் பழக்கத்தையும் தந்தது. இது பின்னர் வழக்கமாகி 'விருந்தோம்பல்' என்னும் பண்பாகத் தமிழர் மரபாகப் பேணப்பட்டது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இன்று பல்வேறுபட்ட தொழில்கள் செய்து செல்வத்தைத் தேடும் முயற்சி நடைபெறுகின்றது. அன்று எம் முன்னோர் சிறப்பாகப் போற்றிய உழவுத் தொழிலை இன்று மதிப்பவர் சிலரே.

'மாத ஊதியம்' பெறும் தொழில்களே மதிப்புப் பெற்றுள்ளன. இதனால் மனித வாழ்வியலும் மாத ஊதியத்திற்கு ஏற்பவே திட்டமிடப்படுகிறது. சூழல் மாற்றங்களால் இத் தொழில் பாதிக்கப்படுவதும் மனிதனை மாற்றிவிடுகின்றது.


தான் பெறும் ஊதியத்தை பலரோடு பகிர்ந்துண்ணும் நடைமுறையை விடுத்து தன்னலம் பேணும் சுயநலவாதியாக மாறிவிட்டான். அவனை மீண்டும் இயல்பு நிலைக்குத் திருப்ப ஒரு வழிகாட்டல் தேவை.

அதை அன்றே முன்னோர் எவ்வாறு உணர்ந்தனர் என வியக்க வைக்கின்றது நாலடியார். இது முக்காலமும் அறிந்த வழிகாட்டல் என்பதில் ஐயமில்லை.

'துகள்தீர் பெரும்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க
அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்' (நாலடியார்-02)

# கிழக்கில் ஏற்பட்ட மோதலால் 52 ஆயிரம் பேர் மட்டுமே அகதி முகாம்களில் தஞ்சம்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலை காரணமாக சுமார் ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சம் பேர் இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர் என்று கூறு வதில் எவ்விதமான உண்மையும் இல்லை.

கிழக்கு மாகாணத்திலுள்ள அகதி முகாம் களில் 52 ஆயிரம் பேர் மட்டுமே அகதிகளாக இருக்கின்றனர். ஒரே நேரத்தில் கூடுதலான அகதிகள் வருகை தந்தமையினால் அது அரசாங்கத்திற்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது என்று பாதுகாப்பு விவகாரங்க ளுக்கான அரசாங்க பேச்சாளரும் அமைச் சருமான ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து புத்தளத்தில் அகதிகளாக இருக்கின்றவர்கள் சுமார் ஒன்றரை வருடங்களாக அகதி முகாம்களிலேயே வாழ்கின்ற னர். அந்த நிலை மட்டக்களப்பில் அகதிக ளாக இருக்கின்றவர்களுக்கு ஏற்படாது.

தமிழ் மக்கள் இடம் பெயர்ந்த இடங்களில் சிங்களமக்களை கொண்டு சென்று குடியேற்றுவதற்கான நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை. இடம்பெயர்ந்தவர்களின் உரிமை யின் பிரகாரமே அவர்கள் குடியேற்றப்படுவார் கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உலக தரத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய குழுவொன்றை ஜனாதிபதி நியமித்திருப்பதையிட்டு பிரித்தானியா விசேட அறிக்கையொன் றை சமர்பித்துள் ...

அந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான விடயங்கள் கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுவதில் எவ்விதமான உண்மையும் இல்லை.

கடந்த காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் மற்றும் குற்றச் சம்பவங்கள் தொடர்பாக கண்டறிந்து அவை தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

அவற்றை தெரிந்து கொள்ளக்கூடிய அதி காரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதனால்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்கள அதிகாரிகளை சந்தித்து அவர் களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இந்த நிலை நாட்டின் நிறைவேற்று தலை வர் எந்நேரமும் அவதானத்துடன் இருக்கி றார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது என் றார். (ச-5)

# வடக்கின் மாபெரும் போரில் மத்தியகல்லூரி வலுவான நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நேற்று ஆரம்பமான 101 ஆவது வடக்கின் மாபெரும்போரில் மத்திய கல்லூரி அணி வலுவான நிலையில் உள்ளது.

நேற்றுக் காலை 8.45 மணிக்கு ஆரம்பமான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி நவனீத்தின் துல்லியமான பந்துவீச்சில் 126 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பி.நேசவர்மன் 36 ஓட்டங்களையும், எம்.ஹரிபிரவீன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி சார்பாக நவனீத் 19 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், செல்டன் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் யாழ்.மத்திய கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஆர்.வினோத்குமார் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும், செல்ரன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

இன்று இரண்டாவது நாள் ஆட்டம் காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும். (ச-5)

## வவு.,மன்னார்...

எறிகணைத்தாக்குதல்களை வவுனியாவிற்கு வடமேற்காக 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இரணை இலுப்பைக் குளம் பகுதியில் இருந்து காலை 9 மணி முதல் முள்ளிக்குளம் பகுதியை சூழவுள்ள பிரதேசங்களை நோக்கி மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

இதேவேளை முல்லைத் தீவு மாவட்டத்தில் நேற்று மதியம் மூன்று தடவை மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி விமானப் படையினர் வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## மனிதாபிமான...

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வேளை ஊடகவி யலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி யொன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் கூறியதாவது, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பாக பல வித மான சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இரு நாடுகள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது சாதாரண விடயமே.

வர்த்தக நடவடிக்கைகள், சிறைக்கைதிகள் பறிமாற்றம், வரி விதிப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக இவ்வாறான ஒப்பந்தங்கள கைச்சாத்திடப்பட்டு வருகின்றன.

அவ்வாறானதொரு உடன்படிக்கையொன்றிலேயே இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

அமெரிக்கா உலகில் உள்ள 89 நாடுகளுடன் இவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-5)

# யாழிற்கு பத்திரிகைத்தாளை எடுத்துச்செல்ல...

அபிவிருத்தி புனர்வாழ்வு போன்ற நடவடிக்கைகளுக்கு வேண்டிய சகல வகையான பொருட்களும் எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டத்திறகு முரணாக மேற்கொள்ளப்பட்டு வரும் மிகமோசமான மனிதஉரிமை மீறல்களை வெளி உலகுக்கு தெரியாமல் மூடி மறைப்பதற்காக குடா நாட்டிலுள்ள ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் மிக மோசமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுவருகிறது.

கப்பல் மூலம் குடாநாட்டிற்கு பொருட்களை எடுத்துச் செல்வதாக கூறி இலங்கை அரசு ஏழு மாதங்களாகியும் குடாநாட்டிலுள்ள பத்திரிகை நிறுவனங்கள் பத்திரிகை அச்சிடுவதற்குத்தேவையான காகிதாதிகளை கொழும்பிலிருந்து எடுத்து வருவதிலுள்ள தடைகளை நீக்க எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

காகிதாதிகள் இன்மையினால் பத்திரிகைகளை அச்சிடுவதை நிறுத்தவேண்டிய அபாயகரமான நிலை குடாநாட்டிலுள்ள பத்திரிகை நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பத்திரிகை வெளிவருவதை தடுப்பதற்காக மேற்கொள்ளும் இந் நடவடிக்கை ஊடக சுதந்திரத்தினை நசுக்கும் செயலாகும். பொது மக்கள் தகவல்களை அறிந்து கொள்வதற்கான ஜனநாயக உரிமைகளை குழிதோண்டிப்புதைக்கும் நடவடிக்கையாகும்.

குடாநாட்டில் நிலவும் உணவுப் பஞ்சம், பொருளாதாரத்தடைகள், மருத்துத் தட்டுப்பாடு மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான செய்திகள் வெளிவருவதை தடுப்பதற்காகவே அரசு இந் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

இது மிக ஆபத்தான ஓர் நிலையாகும். இந்நிலை நீடிக்குமானால் குடாநாட்டில் மனித சித்திரவதைகள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள், படுகொலைகள் என்பன மிகப் பாரிய அளவில் இடம்பெற வாய்ப்பு உள்ளது. அரசின் இந்த ஜனநாயக விரோத நட வடிக்கையினை வன்மையாகக் கண்டிப்ப தோடுபத்திரிகைகள் வெளிவருவதை தடுக்கும் நோக்கில் அச்சிடுவதற்கு வேண்டியகாகி தாதிகளை எடுத்துச் செல்லுவதற்கு அரசு விதித்துள்ள தடைகளை நீக்கி அவற்றை குடாநாட்டிற்கு உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படியும் வேண்டுகின்றோம் என்றுள்ளது. (எ)

## இனப்பிரச்சினைக்கான...

கட்சிகளிடம் கருத்தொற்றுமையை ஏற்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி மகிந்த நிர்வாக நடவடிக்கை என்ன என்பதை அவர் குறிப்பிடவில்லை என அமெரிக்கச் செய்திகள் தெரிவித்தன.

போர்மூலமான தீர்வை இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை. தற்போதும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என குறிப்பிட்ட அவர், இலங்கை அரசாங்கம் நிலையான சமா தானம் குறித்து ஆராய்ந்துவருவதாக தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் இனப் பிரச்சினைக்கான இறுதித்தீர்வில் தமிழீழ விடுதலைப்புலிகள் பங்குதாரர் ஆக்கப்படுவர் என போகொல்லாகம மேலும் கூறினார். (ச-3,5)


## 1ஆம் தவணைப் பரீட்சை-2007

தரம் 4 முதல் O/L வரை முதலாந்தவணைப் பரீட்சை-2007 வினாப்பத்திரங்கள் செவ்வாய் பெறலாம். தேவையானவர்கள் இன்று தொடர்பு கொள்க.

திரு.கணேசலிங்கம் அவர்களின்
வெற்றித் தேர்வு -05
புலமைப் பரிசில் வினாத்தாள் விசேட கையேட்டுடன்
ஞாயிறு பெறலாம் (18.03.2007)

அனைத்தும் கிடைக்குமிடங்கள்:
பூபாலசிங்கம், யாழ்.நகர்
துர்க்கா, சுன்னாகம்
மொடேன், நெல்லியடி
விநாயகர் கொமினிகேசன், தாவடிச் சந்தி
நியூ மற்ஸ் அக்கடமி, சாவகச்சேரி
சயன்ஸ் அக்கடமி, நல்லூர், அரியாலை

தொடர்புகளுக்கு: 222 9016, 077 3126807, 226 3815

பிரதிகள் குறைவானவை முந்துங்கள் (819)

## தொழிற் பயிற்சி நெறிகள்

- RADIO-T.V.-VIDEO DECK REPAIRING — காலம் -10 மாதங்கள்
- ELECTRICAL WIRING & REWINDING — காலம் -07 மாதங்கள்
- AIR-CONDITIONING & REFRIGERATION — காலம் -07 மாதங்கள்
- MOTOR CYCLE MECHANISM — காலம் -06 மாதங்கள்
- பூரணமான பயிற்சி அளிக்கப்படும்.
- உள்நாடு -வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற உகந்த பயிற்சி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்:- 21&24 MARCH 2007

JAFFNA TECHNICAL INSTITUTE

No:45-CLOCK TOWER ROAD-JAFFNA.

("சிவதர்ஷன்" கடைக்கு முன்பாக)

கிளை:B.B.S.UNIVERSAL EDUCATION CENTER

Dr.சிறீ பத்மநாதன் கட்டடம் புலோலி-மந்திகை.

(821)


## தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபின்...

இலங்கை இனப்பிரச்சினைகுத் தீர்வு காணல் விடயத்தில் பல நாடுகள் தங்களது ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

அந்த வ்கையில் பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் முன்வைத்துள்ள கருத்துக்களையும் அரசாங்கம் வரவேற்கிறது என்றும் அவர் சொன்னார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வுகாணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகவில்லை. அத்தோடு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதிலும் காலம் தாழ்த்தவில்லை. ஜெனீவாவில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இருந்து விடுதலைப்புலிகளே விலகினர் என்பது சர்வதேச சமூகத்தின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திடம் இருக்கிறது.

இந் நாட்டில் தற்போது யுத்தம் செய்யப்படவில்லை. எனினும் சமாதானம் சீர்குலைந்தமைக்கு புலிகளே பொறுப்புக் கூற வேண்டும். சமாதான முன்னெடுப்புக்களிலும் சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலமும் தீர்வுகாணப்படவேண்டும் என்பதிலும் புலிகளுக்கு விருப்பமில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையை தனி தரப்பால் முன் னெடுக்கமுடியாது.

இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது என்பதோடு இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள படை நடவடிக்கைகள் யுத்தம் அல்ல. விடுதலைப்புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளுக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்களை மீட்கும் மனிதா பிமான நடவடிக்கையாகும்.

நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனீவாவில் விளக்கமளித்துள்ளார். விடுதலைப் புலிகளின் பயங்கர வாத செயற்பாடுகளுக்குள் சிக்கி அடிப் படை உரிமைகள் இல்லாத நிலையில் இருக்கின்ற தமிழ்மக்களை மீட்டு அவர்களுக்கு சகல உரிமைகளையும் பெற்றுக் கொடுக் கும் நட வடிக்கைகளிலேயே இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. (ச)

## இந்திய...

உள்ளிட்ட விடயங்கள் உரையாடப்பட்ட தாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். அத்துடன் இவற்றுக்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜேர்மன் தூதுவர் மற்றும் உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியுள்ளதாகவும், கூட்டமைப் பினர் தெரிவித்தனர்.

நேற்றைய இச் சந்திப்பின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி, கனகசபை, எஸ். ஜெயானந்தமூர்த்தி, பா.அரியநேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மக்களின் நிலை குறித்து இவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் விளக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## மக்கள் தொகை...

பான தெரிவுக்குழுவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது யோசனைகளை சமர்ப்பித்துள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க.சமர்ப்பித்துள்ள யோசனையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, அதில் விகிதாசார முறையின் மூலமோ அல்லது பிரதிநிதித்துவ தேர்தல் மூலமோ தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களது எண்ணிக்கைகளை தீர்மானிப்பதற்கு முன்னர் அனைத்து அரசியல் கட்சிகளினதும் உடன்பாட்டை பெற வேண்டும்.

தொடர்ந்து நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி முறைத் தேர்த லில் பரிசீலிப்பதோடு ஜனாதிபதித்தேர்தல் முறையையும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.